1971 ஜுன் 19]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சென்னைபோன்ற நகரங்களில் ஏராளமானவர்கள் குறிப்பிட்ட இடங்களில் வாழ்கிறார்கள். கிராமங்களில் அப்படி ஆயிரக்கணக்கான அரிசன மக்கள் ஒரேயிடத்தில் வாழவில்லை. தவிர ஏற்கனவே கட்டிக் கொடுத்த வீடுகளில் சில சரியாக இல்லை, இடிந்து வீழ்ந்தன. அந்த வீடுகளுக்குக்கூட அரசாங்கம் பொறுப் பேற்று ரிப்பேர் செய்ய, சீர்திருத்தம் செய்ய பொறுப்பேற்றுக் கொண் டிருக்கிறது. கடன் முறையில் கட்டிக் கொடுத்த வீடுகள் சரியாக இயங்காத தால் தான் இந்த அரசாங்கம் நிலத்துறை மூலம் நல்ல முறையில் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறது. ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில் அதிக அக்கறை காட்டி, குடிசை மாற்று வாரியம் மூலம், மாடிவீடுகள் கட்டிக் கொடுத்து வருகிறோம். அவைகள் நீண்ட காலம் உழைக்கக்கூடிய வீடுகள்.

திரு பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்டாமல் மற்ற சமுதாயத்தினர் வாழும் பகுதியில் கட்டினால், சமுதாயச் சீர்திருத்தம் மேலும் வலுவடையும் என்று கூறுகிறார்களே, அது பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கூறிக் கொண் டிருக்கிற நிலைதான் இருக்கிறதே தவிர, கூடி வாழும் நிலையில் வரவில்லை. இரண்டு சமுதாய மக்களும் ஒத்துழைத்தால், உறுப்பினர் கூறியபடி கேட்கலாம்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, வீடுகள் கட்டிக் கொடுப்பதில் மலைவாசிகளுக்குக் காட்டப்படும் சலுகை நமது நாட்டிலுள்ள நரிக் குறவர்களுக்கும் காட்டப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எல்லோருக்கும் காட்டப்படும்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, 1967-க்கு முன்னால் அரிசனங்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள், தனிப்பட்ட கண்டிராக்டர்கள் மூலம் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அது கட்டப்பட்ட பத்தாவது நாளிலே முக்கால்வாசி இடங்களில் விழுந்துவிட்டன. அத்தகைய வீடுகளுக்கு மறு படியும் அரசாங்கம் அனுதாபத்தோடு கவனித்து பண உதவி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட வீடுகள் சிலவற்றை அரசாங்கம் சீர்திருத்தம் செய்து கொடுக்கும் வகையில் பொறுப்பேற்று இராமநாதபுரம் மாவட்டத்தில் செய்து வருகிறோம். முற் றிலும் இடிந்த வீடுகளை எதுவும் செய்ய முடிவதில்லை. சிலஇடங்களில் நாங்களே கட்டிக் கொடுக்க முயன்று வருகிறோம். எல்லா இடங்களிலும் செய்யும் நிலையில் அரசாங்கம் இருக்கவில்லை.

திரு. கு. திருப்பதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது, குடிசை மாற்று வாரியம் சென்னையில் இருப்பதால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அமலில் இல்லை என்று சொன்னார்கள். மதுரை நகரில் அத்திட்டம் இல்லாததால், மதுரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : குடிசை மாற்று வாரியம் மதுரையையும் சேர்த்து எடுத்துக்கொள்ளும்பொழுது நிச்சயமாகக் கவனிக்கப்படலாம்.

Sri Sangu Sitht Vinayagar Temple Land.

***3. *Q.*—Dr. H. V. HANDE :** Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether he has received a petition, dated 2nd April 1970 from the President, Sri Sangu Sithi Vinayagar Temple Executive Com-

mittee, Tirupattur, North Arcot District, regarding a dispute over the Land in T. S. No. 502 belonging to the temple between the Hindus and Muslims of the locality ; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) அம்மனு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இத்துடன் ஒரு விளக்கத்தையும் சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன். 850 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மகானுடைய சடலம் அடக்கம் செய்யப்பட்டதாகச் சொல்லப் படும் அந்த இடம் அரசாங்க புறம்போக்குக்குச் சொந்தமானது. அங்கு 23–2–1970 அன்று ஒரு விநயகரைக் கொண்டுவந்து, திடீரென்று கீற்றுக்கொட்டகை போட்டிருந்தார்கள். சமீபத்திலே நான் திருப்பத் தூருக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது பக்தர்கள் என்னைச் சந்தித்தார்கள். முஸ்லீம்கள் மத்தியில் இருக்கும் பகுதியில் பிள்ளையார் கோயிலை வைப்பது நல்லது அல்ல என்று வருத்தம் தெரிவித்தார்கள். வேறு ஒரு இடத்தை அரசாங்கத்தின் மூலம் கட்டிக்கொடுத்தால் அங்கு விநயகரை வைத்துக்கொள்ளலாம் என்ற யோசனை சொல்லப்பட்டது. கட்டும் பொறுப்பை அவர்களே ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண் டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளகிறேன்.

ஆடு மாடுகளின் முடிகள் ஏற்றுமதி.

*4. வின. **திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1969–70-ம் ஆண்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கிடைத்த ஆடுமாடுகளின் முடிகள் எந்தெந்த மாநிலங் களுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : வட ஆற்காடு மாவட்டத்தில் 1969–70-ம் ஆண்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் விழும் ஆடுமாடுகளின் முடிகளில் பாதியளவு ஆஸ்திரேலியாவிற்கும், மேற்கு ஜெர்மனிக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. வாலாஜாபேட்டையிலுள்ள கம்பளி விரிப்பு உற்பத்தித் தொழிற்சாலைகளில் ஒரு பகுதி உபயோக மாயிற்று. மீதி மைசூர் மாநிலத்திற்கும் வட இந்தியாவிற்கும் அனுப்பப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மேற்கண்ட வெளிநாடுகளுக்கு அனுப்பும் முடியினால், அந்த ஆண்டில் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானத்தை அறிவிக்க இயலுமா? அந்த வருமானத்தை மேலும் பெருக்கிக் கொள்ள அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையினை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்திற்கு எதுவும் வரு மானம் கிடையாது. அவரவர்கள் விற்றுக் கொள்கிறார்கள். அரசாங்கத்தினுடைய விண்ணமங்கலம் யூனிட்டின் சார்பில் 460 டன் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக வெளிநாட்டுச் செலாவணி என்ற முறையிலே $7\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் கிடைக்கப்பெற்றிருக்கிறது.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இந்த முடியை ஏற்றுமதி செய்வதுபோல, ஆடுமாடுகளின் தோல் எந்தெந்த நாடுகளுக்குச் செல் கிறது, எவ்வளவு மதிப்புள்ள தொகை அன்னியச் செலாவணியாக நமக்குக் கிடைக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது முடியைப் பற்றிய கேள்வி. தோலைப்பற்றித் தனியா கேட்க வேண்டும்.